# பைமா (Baima)




**Population in China:**
10,000 (1984)
13,700 (2000)
16,900 (2010)
**Location:** Gansu, Sichuan
**Religion:** Animism
**Christians:** None Known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Di, White Horse Tibetans, Pe, Pingwu Tibetans

**மக்கள்தொகை:** 17,000 (Joshua Project)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, வகைப்படுத்தப்படாத மொழி

**மொழி வழக்குகள்:** 0

**ஆன்ம வாதத்தை பின்பற்றுபவர்கள்:** 100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** BQH00

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம் :** ஏறக்குறைய 13,700 பைமா மக்கள் சிசுவான்-கன்சு மாநில எல்லையின் இருபுறங்களில் பைமா (வெள்ளைக் குதிரை) பள்ளத்தாக்கைத் தொட்டபடி உள்ள 14 கிராமங்களில் வசிக்கின்றனர். தற்போதைய அநேக வெளியீடுகளில் இவர்கள் எண்ணிக்கை 1,10,000 எனக் குறிப்பிடப்பட்டாலும் அவ்வளவு அதிக எண்ணிக்கை மிகையானது. பைமா கிராமங்கள் கன்சு மாநிலத்தின் வேன்ஷியன் (Wenxain) நகரத்திலிருந்து 32 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளன.

**அடையாளம்:** பைமா மக்கள் திபெத்தியர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தாலும் இவர்கள் ஒரு தனித்துவமான இனமாவார்கள், திபெத்தியர்கள் மரபில் இவர்களுடைய தொடர்பு மிகக்குறைவானது. இவர்கள் தங்களுடைய சொந்த மொழியைப் பேசுகிறார்கள், தங்களுடைய தனித்துவமான உடையை அணிகிறார்கள் மற்றும் பெருமையோடு தங்களுடைய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்து வருகின்றனர். மிகமுக்கியமாக இவர்கள் ஒருபோதும் திபெத்திய புத்த மதத்தைப் பின்பற்றியதில்லை.

**மொழி :** நான்கு பிரிவுகளையுடைய வகைப்படுத்தப்படாத பைமா மொழி, போதி (Bodic) மொழிப் பிரிவைச் சேர்ந்தது. இம்மொழி சீன மற்றும் திபெத்திய மொழிகளிலிருந்து வார்த்தைகளைக் கடன் வாங்கியிருப்பதைக் காணமுடியும். ஒரு மொழியியலாளர் பைமா மொழியைத் திபெத்திய மொழியின் சில பண்புகளையுடைய மொழி என விவரிக்கிறார்.

**வரலாறு:** பைமா மக்கள் தாங்கள் பழமையான தி (Di) இனத்தின் சந்ததியினர் எனக் கூறுகின்றனர். கி.பி. 551 லிருந்து சீனக் குறிப்பேடுகளும் "தி இனம் பைமா என்றும் அழைக்கப்படும்" எனக் கூறுகின்றன. ஒரு வரலாற்று அறிஞர் இவ்வாறு கூறுகிறார் "'மூன்று ராஜ்யம்' காலங்களில் (கி.பி. 220-265) சிசுவான், கன்சு மற்றும் ஷான்சி மாநிலங்களில் வாழ்ந்த தி இனத்தின் மிகப்பெரிய பிரிவாகப் பைமா திகழ்ந்தது." மேற்கு ஜவ் (Zhou) ராஜ்யத்தின் (கி.மு.1100-771) காலங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் ஹென் (Han) சீனர்கள் இடம்பெயர்ந்து கன்சு மாநிலத்தில் தி இனத்தவர்களின் மத்தியில் வாழவந்தனர். மியோ இனத்தோடு சேர்த்து மற்ற இனத்தவர்களும் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பைமா மக்கள் இப்பொழுது வாழும் மலைப்பகுதிக்குத் துரத்தியடிக்கப்பட்டனர். இவ்வினத்தவர்கள் இப்பகுதியின் இன்றைய இன ஏற்பாடுகளுக்குக் காரணமாயிருக்கக்கூடும்.

**பழக்கவழக்கம் :** பைமா வாலிபர்கள் மற்றும் வாலிபப் பெண்களுக்குத் திருமணத்திற்கு முன்பு உடலுறவில் ஈடுபட அனுமதியுண்டு ஆனால் திருமணத்திற்குப்பின் குடும்ப வாழ்வில் உண்மையாயிருப்பது வலியுறுத்தப்படும். விவாகரத்து அவமானமாகக் கருதப்படும்.



திருமணத்திற்குப்பின் பைமா பெண்கள் மீன் எலும்பு ஆரம் மற்றும் ஆட்டுத்தோல் மற்றும் கோழி இறகுகளால் செய்யப்பட்ட தொப்பியை அணிகிறார்கள்.

**மதம்:** பைமாக்கள் வெள்ளைக் குதிரைக் கடவுளை எல்லாக் கடவுளுக்கும் மேலான கடவுளாகக் கருதுகின்றனர். பைமா மக்களுடையகல்லறைகள்மேல் வண்ணமயமான கொடிகள் கட்டப்பட்டிருக்கும். மரித்த ஆண்கள் கல்லறைமேல் ஒன்பது கொடிகளும் பெண்கள் கல்லறைமேல் ஏழு கொடிகளும் கட்டப்பட்டிருக்கும். இவர்கள் வழக்கத்தின்படி இந்தக் கொடிகள் மரித்தவர்களுடைய ஆத்துமாவைச் சொர்க்கத்திற்குக் கொண்டுசெல்லும். பைமாக்கள் சேவலைப் பாதுகாக்கின்ற கடவுளாகக் கருதுகின்றனர். இவர்கள் வழக்கத்தில் உள்ள ஒரு கதையின்படி ஒருமுறை நடு இரவு எதிரிப்படை இவர்களுடைய கிராமத்தைத் தாக்க முற்படும்போது ஒரு சேவல் உரத்தச் சத்தமாகக் கூவி இவர்களை எழுப்பியது, இவர்கள் எழுந்து அவர்களைத் தோற்கடித்தனர்.

**கிறிஸ்துவம்:** பைமாக்கள் இதுவரை சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பு அடையவில்லை. இவர்களுடைய மொழி, கலாச்சாரம் மற்றும் தனிமையான வசிப்பிடம் இவர்களை உலகத்தின் மற்ற பகுதிகளிலிருந்து மறைத்துவிட்டது. சீன சுவிசேஷ வானொலிகளும் உயரமான மலைகளைக் கடந்து செல்லமுடியவில்லை. நூறு சதவீதம் சுவிசேஷத்தைக் கேட்காத மக்கள் மத்தியில் பணிசெய்ய விரும்பும் சபை அல்லது நிறுவனங்களுக்குப் பைமா இனம் ஒரு நல்ல தேர்வாயிருக்கும்.